IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
GUDIYATHAM, VELLORE DISTRICT.

C.C.NO.179/2015

DEPOSITION OF WITNESS P.W.3

| | | |
|---|---|---|
| NAME | : | SRIDEVI |
| HUSBAND NAME | : | SARAVANAN |
| VILLAGE | : | GUDIYATHAM |
| OCCUPATION | : | SSI |
| AGE | : | 50 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 2th day of JULY 2026.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது குடியாத்தம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். எங்கள் காவல் நிலையத்தில் கடந்த 2013ஆம் வருடம் உதவி ஆய்வாளராக திருமதி.ஜமுனாராணி மற்றும் காவல் ஆய்வாளர்கள் திருமதி.ராணி மற்றும் சாந்தி ஆகியோர் பணிசெய்த விவரம் எனக்கு தெரியும். உதவி ஆய்வாளர் இறந்துவிட்டதாலும், ஆய்வாளர்கள் பணிமாறுதலில் சென்றுவிட்டதாலும், அவர்களுடைய கையொப்பம் எனக்கு பரிட்சயம் என்பதாலும், நான் ஆவணங்களின் அடிப்படையில் கூடுதல் சாட்சியம் அளிக்கிறேன்.

கடந்த 31.12.2013 அன்று காலை 10.00 மணியளவில இவ்வழக்கின் முதல்நிலை புலன் விசாரணை அதிகாரி திருமதி.ஜமுனாராணி என்பவர் நிலைய பொறுப்பில் இருந்தபோது அனுராதா, க/பெ.பிரதாப்குமார் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மைகேற்ப நிலைய குற்ற எண்.25/2013 இதச பிரிவுகள் 498(A), 420, 506(1) என முதல் தகவல் அறிக்கை பதிவு அதன் அசல் முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் மனுவை இணைத்து கணம் நீதிமன்றத்துக்கு அனுப்பி வைத்தும், ஒரு நகலை மேலதிகாரிகளின் பார்வைக்கு வைத்தும், விசாரணை நகலை அவரது விசாரணைக்கு எடுத்துக்கொண்டார். பின்னர் அவர் பணி மாறுதலில் சென்றுவிட்டதால் ஆய்வாளர் ராணி வழக்கு விசாரணையை அவரது பார்வைக்கு எடுத்துகொண்டார்.

01.01.2014 அன்று பகல் 12.00 மணிக்கு சம்பவ இடம் சென்று விசாரணை செய்து சாட்சிகள் தியாகராஜன் மற்றும் முருகன் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து மேற்படி சாட்சிகளின் கையொப்பம் பெற்றார். பின்னர் சாட்சிகள் அனுராதா, ஸ்டாலின், சுஜய்குமார், தியாகராஜன் முருகன்,

ராஜசேகரன் ஆகியோரை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலங்களை பதிவு செய்தார். சாட்சிகளின் விசாரணையில் இருந்து சம்பவம் உண்மை என்று தெரியவந்ததால் எதிரிகளைத் தேடிவந்த நிலையில் எதிரிகள் முன்பிணை பெற்றதால் கைது நடவடிக்கை இல்லை. பின்னர் சாட்சிகளின் விசாரணையில் இருந்தும், அரசு தரப்பு வழக்கறிஞர் பரிந்துரையின் அடிப்படையிலும் இவ்வழக்கின் சட்டபிரிவை 498(A), 420, 506(1)IPC ல் இருந்து 498(A), 4 and 6 of DP Act என மாற்றம் செய்து சட்ட பிரிவு மாறுதல் அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். இத்துடன் அவரது புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது மேலே கண்ட பிரிவுகளின் கீழ் குற்ற அறிக்கையை தாக்கல் செய்தார்.

புகார் மனு அ.சா.ஆ.2 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும் பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகவும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5, சட்டபிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

நான் சொன்னபடி வழக்கு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. சொன்னபடி சொன்ன நேரத்தில் வாக்குமூலம் பெற்று வழக்கு பதிவு செய்யவில்லை என்றாலும் சம்பவ இடம் சென்று பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யாமல் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. சொன்னபடி சொன்னவிதத்தில் எதிரிகள் கைது செய்யப்படவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமில்லை என்றாலும் சரியல்ல.

Sd/-R.Saranya.,
Judicial Magistrate,
Gudiyatham.